# பெப்ரவரி– 06 – செவ்வாய்
### புனித கொன்சாலோ கார்சியா

## உமது இல்லத்தில் தங்கியிருப்போர் நற்பேறு பெற்றோர்: திபா. 84:4

## முதல் வாசகம் : 1அரசர் 8:22-23.27-30

பின்னர், சாலமோன் ஆண்டவரின் பலிபீடத்தை நோக்கி நின்று கொண்டு, இஸ்ரயேல் சபையார் அனைவர் முன்னிலையில் வானத்திற்கு நேரே தம் கைகளை உயர்த்திஅவர் மன்றாடியது. இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரே! மேலே விண்ணிலும் கீழே மண்ணிலும் உம்மைப் போன்ற வேறு கடவுள் யாரும் இல்லை. உமது முன்னிலையில் முழு உள்ளத்தோடு உமக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் உம்முடைய அடியார்க்கு உமது உடன்படிக்கையின்படி தவறாது பேரன்பு காட்டி வருகிறீர்.கடவுள் உண்மையில் இந்த மண்ணுலகில் தங்கியிருப்பாரா? வானமும் வான மண்டலங்களும் உம்மைக் கொள்ள இயலாதிருக்க நான் கட்டியுள்ள இக்கோவில் எப்படி உம்மைக் கொள்ளும்?என் கடவுளாகிய ஆண்டவரே! உம் அடியான் செய்கிற வேண்டுதலையும் விண்ணப்பத்தையும் கேட்டருளும் உம் அடியான் இன்று உம் முன்னிலையில் எழுப்பும் கூக்குரலுக்கும் செய்யும் வேண்டுதலுக்கும் செவிசாய்த்தருளும்!"என் பெயர் இவ்விடத்தில் விளங்கும்" என்று இக்கோவிலைப்பற்றி நீர் சொல்லியிருக்கிறீர்! இவ்விடத்தில் உம் அடியான் செய்யும் வேண்டுதலைக் கேட்டருள்வதற்காக, இரவும் பகலும் உமது கண்கள் இதனை நோக்கி இருப்பனவாக!உம் அடியானின் விண்ணப்பத்திற்கும் இவ்விடத்தை நோக்கிச் செய்கிற உம் மக்கள் இஸ்ரயேலர் வேண்டுதலுக்கும் செவிசாய்ப்பீராக! உமது உறைவிடமாகிய விண்ணகத்திலிருந்து கேட்டு அருள்வீராக! கேட்டு மன்னிப்பு அருள்வீராக!

**பதில்பாடல் :** ஆண்டவரே உமது உறைவிடம் எத்துணை அருமையானது.

## நற்செய்தி : மாற்கு 7: 1 - 13

அக்காலத்தில் ஒருநாள் பரிசேயரும் எருசலேமிலிருந்து வந்திருந்த மறைநூல் அறிஞர் சிலரும் அவரிடம் வந்து கூடினர். அவருடைய சீடருள் சிலர் தீட்டான, அதாவது, கழுவாத கைகளால் உண்பதை அவர்கள் கண்டார்கள்.பரிசேயரும், ஏன் யூதர் அனைவருமே, தம் மூதாதையர் மரபைப் பின்பற்றிக் கைகளை முறைப்படி கழுவாமல் உண்பதில்லை. சந்தையிலிருந்து வாங்கியவற்றைக் கழுவிய பின்னரே உண்பர். அவ்வாறே கிண்ணங்கள், பரணிகள், செம்புகள் ஆகியவற்றைக் கழுவுதல் போன்று அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள் இன்னும் பல இருந்தன.ஆகவே பரிசேயரும் மறைநூல் அறிஞரும் அவரை நோக்கி, "உம் சீடர் மூதாதையர் மரபுப்படி நடவாமல் தீட்டான கைகளால் உணவு அருந்துவதேன்?" என்று கேட்டனர்.அதற்கு அவர், "வெளிவேடக்காரர்களாகிய உங்களைப்பற்றி எசாயா பொருத்தமாக இறைவாக்கு உரைத்திருக்கிறார். "இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர் இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலையில் இருக்கிறது.மனிதக் கட்டளைகளைக் கோட்பாடுகளாகக் கற்பிக்கின்றனர். இவர்கள் என்னை வழிபடுவது வீண்" என்று அவர் எழுதியுள்ளார்.நீங்கள் கடவுளின் கட்டளைகளைக் கைவிட்டு மனித மரபைப் பின்பற்றி வருகிறவர்கள்" என்று அவர்களிடம் கூறினார்.மேலும் அவர், "உங்கள் மரபை நிலைநாட்டக் கடவுளின் கட்டளைகளை வெகு திறமையாகப் புறக்கணித்து விட்டீர்கள். "உன் தந்தையையும் தாயையும் மதித்துநட" என்றும் தந்தையையோ தாயையோ சபிப்போர் கொல்லப்பட வேண்டும்" என்றும் மோசே உரைத்திருக்கிறார் அல்லவா!ஆனால் ஒருவர் தம் தாயையோ தந்தையையோ பார்த்து, "நான் உமக்குத் தரக் கடமைப்பட்டிருக்கிறது "கொர்பான்" ஆயிற்று அதாவது கடவுளுக்குக் காணிக்கையாயிற்று" என்றால்,அதன்பின் அவர் தம் தாய் தந்தைக்கு எந்த உதவியும் செய்ய நீங்கள் அனுமதிப்பதில்லை.இவ்வாறு நீங்கள் பெற்றுக் கொண்ட மரபின் பொருட்டுக் கடவுளின் வார்த்தையைப் பயனற்றதாக்கி விடுகிறீர்கள். இதுபோல நீங்கள் பலவற்றைச் செய்கிறீர்கள்" என்று அவர்களிடம் கூறினார்.

**தியானம்:** இன்றைய இறைவாத்தைப் பகுதிகள் மூலமாக நல்ல படிப்பினையை எமக்கு எடுத்து கூறுகின்றது. நாம் வாழும் உலகிலே வெளிவேடம் என்பது பலவிதத்தில் பரந்து காணப்படுகின்றது. அவ்வாறான வாழ்க்கை எம்மை விட்டு நீக்கப்பட வெண்டுமென்றே இறைவன் விரும்புகின்றார். இன்றைய நற்செய்தி வாசகத்திலும் கூட பரிசேயரும், மறைநூல் அறிஞர்கள் சிலர் சீடர்கள் பற்றி இயேசுவிடம் குறை கூறுகின்றார்கள். அதற்கு இயேசு நீங்கள் உதட்டினால் இறைவனை வழிபடுகின்றீர்கள், மனிதன் கட்டளைப்படி வாழ்கின்றீர்கள் என்று இறைவாக்கினர் எசாயா கூறியதை அவர்களுக்கு சுட்டிக் காட்டுகின்றார். இன்று நாங்களும் கூட செய்யும் வழிபாடுகளோ, வாழ்க்கை முறைகளோ. செய்யும் செயற்பாடுகளோ அனைத்தும் மற்றவர்கள் பார்க்க வேண்டும், அவர்கள் எங்களைப் புகழ வேண்டும் என்று செயற்படுகின்றோம். ஆனால் மற்றவர்கள் செய்வதை குறைகூறிக் கொண்டுவாழ்கின்றோம் இவ்வாறான வெளிவேடமான வாழ்க்கை முறை நீக்கப்பட வேண்டும். உண்மை வாழ்க்கை வாழ்ந்து இறைவனிடம் எமது மன்றாட்டுக்களை ஒப்படைப்போமானால் நிற்சயமாக எமது மன்றாட்டுக்குப் பதில் தருவார். இன்றைய முதல் வாசகத்திலும் கூட சாலமோன் இறைவனிடம் உண்மையுள்ள இறைவன் உம்மைத்தவிர வேறொரு கடவுளும் இல்லை, தந்தை தாவீதுக்கு நீர் கூறிய படியே உமது வார்த்தை நிலைபெறுவதாக என்று மன்றாடினான். (1அர. 8:30) அவரும் அவரது விண்ணப்பத்தை கேட்டருளினார். "கேளுங்கள் கொடுக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள், தட்டுங்கள் திறக்கப்படும், தேடுங்கள் கண்டடைவீர்கள்" இவ்வாறாக இறைமகன் இயேசு கூறுவதை வேதாகமத்தில் பார்க்கின்றோம். எனவே இறைவனிடம் எவ்வாறான சூழ்நிலையில்? எப்படி இறைவனிடம் வேண்டுகின்றோம்? எவ்வாறு வேணடுகின்றோம் என்று சிந்தித்து வெளிவேடமாக இறைவனைப் போற்றிப்புகழாமல் உண்மையுடனும், நேர்மையுடனும் இறைவனைப்புழந்து பாடி மகிழ்வோம்.